பாலத்தைப் பொறுத்தமட்டில் 50 இலட்சம் ரூபாய் தேவைப்படுகின்ற காரணத்தினாலேதான் இப்போது அதற்கான வாய்ப்பு இல்லையென்று தெரிவித்தேன் எதிர்காலத்திலே இதுபற்றி அரசு நிதியாதாரத்தைப் பொறுத்து பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 527, திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

527—

தொட்டியம் தொகுதியில் விவசாயப் பயிற்சி மையம் அமைத்தல்

*37568—திரு. என். ஆர். **சிவபதி:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டியம் தொகுதியில் விவசாயப் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கும்?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எனவே கேள்வி எழவில்லை.

திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டியம் தொகுதியில் அதிகமாக விவசாயிகள் இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் வாழை, கரும்பு, நெல் அதிகமாக சாகுபடி செய்கிறார்கள். அவர்கள் அந்தப் பயிர்களை பாதுகாக்க தக்க தருணத்தில் எந்தெந்த முறைகளைக் கையாள வேண்டும் எனபதையெல்லாம் அறிவதற்கும், விவசாயிகள் நல்ல முறையில் அந்தப் பயிர்களின் விளைச்சலைப் பெருக்குவதற்கும் எந்தத் தருணத்தில் என்னென்ன மருந்துகளையெல்லாம் தெளிக்க வேண்டும் என்பதையெல்லாம் அறிவதற்கும் ஏதுவாக ஒரு பயிற்சி மையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

1995 மே 3]

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சிறிய மாவட்டங்கள் மற்றும் வேளாண்மைப் பல்கலைக் கழகம், வேளாண் கல்லூரி மற்றும் மத்திய அரசு விவசாய பயிற்சி மையங்கள் உள்ள மாவட்டங்களைத் தவிர எல்லா மாவட்டங்களுக்கும், மாவட்டத்திற்கு ஒரு பயிற்சி மையம் இருககிறது. எனவே, திருச்சி மாவட்டத்திலே லால்குடியில் பயிற்சி மையம் இன்றைக்கு செயல்பட்டு வருகிறது. அந்த மையம் திருச்சி மாவட்டத்திலே இருக்கின்ற எல்லா விவசாயிகளுக்கும் தொழில்நுட்பங்களை பகிர்ந்தளித்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற மானியக் கோரிக்கையிலும் சரி, இந்தக் கோரிக்கையிலும் வேளாண்மை பயிற்சி மகளிர் பள்ளிகளையெல்லாம் அமைக்க கருத்துரு இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, உழவர் விவசாய பயிற்சி மையம் அமைப்பதற்கு சாத்தியகூறு இல்லையென்றாலும், அந்தப் பகுதியில் விவசாயிகள் நலன் கருதி, பெண்களும் விவசாயத்திலே அதிகமாக ஈடுபடுகின்ற காரணத்தினால், மகளிர் பயிற்சி மையமானது தொட்டியம் தொகுதியில் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் பெண்களுக்கு வேளாண்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த வகையில் தொட்டியம் பகுதியில் விவசாய பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 528, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

528—

வாய்ஸ் ஸ்கிராம்பலர் கருவிக்குத் தடை விதித்தல்

11287*—டாக்டர் அ. ஸ்ரீதரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—